முருகப்பெருமான் துணை

**பஞ்ச பாண்டவர்களுள் ஒருவரான அர்ஜுனரைத் தொடர்ந்து**
**மகான் நகுலன் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.02.2022**, புதன்கிழமை

1. அறம்தனை கலியுக மக்கள்
அளவிலா செய்து வருதலுற
வரம் தந்து வழிநடத்தும் குரு
வள்ளல் அரங்கன் வழிக்கு வர
2. வருகவே உலகம் மாறுமெனக் கூறி
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
பெருமைபட பிலவ கலை திங்கள்
புகலுவேன் இருபானேழ்திகதி புந்திவாரம்
**(**பிலவ வருடம் தை மாதம் **27**ம் நாள், **09.02.2022** புதன்கிழமை**)**
3. வாரமதில் நகுலன் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
சோரமின்றி மக்கள் கூட்டம்
சுப்பிரமண்யர் ஞானம் அடைய
4. அடையவே அரங்கன் தவவலிமை
ஆற்றல் கொண்ட ஞானமாக
சோடை போக்கும் சன்மார்க்க
சுத்தநெறி ஏற்று வருக
5. வருகவே மக்களிடை தெளிவும்
வருங்காலம் உணரும் அறிவும்
தரும சிந்தை தெளிவும்
தயவுடன் வாழும் பக்குவமும் கூடி
6. கூடியே கலியுக மக்கள்
குருவரங்கன் ஆசி வழியில்
தொடர்ந்து வந்து இனிதே
திருவருள்பட வாழ்ந்து சிறப்பர்
7. சிறப்பான மாந்தர்களாகி உலகோர்
சித்திகளும் வெற்றிகளும் பெறுவர்
மறுப்பின்றி மகான்கள் பூசை
மண்ணுலகில் பெருகி வர
8. வருகவே வையகம் பேரிடரை
வதைக்கும் கிருமி அல்லலை
வருமுலகில் கடந்து நன்கு
வளர்ச்சி நிலைகளாக மாறும்

9. மாறுதல் மக்களெல்லாம் அடைய
மாதவசி அரங்கன் தானும்
ஆறுமுகனார் சோதி வழிபாட்டுடன்
அகத்தியர் சன்மார்க்க சங்க

10. சங்கத்தின் கொள்கை வழிபாட்டை
சகலரும் சமம் எனும் சமத்துவத்தை
எங்கும் பசிபிணி விரட்டுகின்ற
ஏழாம் படைவீட்டின் பலத்தை

11. பலத்தை உலகோர் அடைந்துமே
பணிந்து அரங்கா முருகா என
வலம்வர வணங்கி வர
வையகம் ஞான ஆட்சிபெறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–